பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை
29 06 2025 **SUNDAY** 1240**PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் சமூக பாதுகாப்புத் திட்டங்களால் நாட்டில் 95 கோடி பேர் பயனடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. உத்ராகண்டில் விடுக்கப்பட்டுள்ள கனமழை எச்சரிக்கை காரணமாக, **Chardham** யாத்திரை அடுத்த 24 மணி நேரத்திற்கு ரத்து செய்யப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.
3. ஒடிசா பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை நிறைவுபெறும் இடத்தில் நேரிட்ட கூட்ட நெரிசல் காரணமாக 3 பேர் உயிரிழந்தனர்.
4. தமிழகத்தில் பள்ளிகளின் அருகே சமூக விரோத செயல்களை தடுக்கும் வகையில், சிசிடிவி கேமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.
5. ஆசிய ஸ்னூக்கர் குழு சாம்பியன் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது.

>>>>>>>><<<<<<<<<

மத்திய அரசின் சமூக பாதுகாப்புத் திட்டங்களால் நாட்டில் 95 கோடி பேர் பயனடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மக்களிடைய மனம் திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் 64 சதவீதம் பேர் சமூக பாதுகாப்பை பெற்றிருப்பதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 46 செகண்ட்ஸ்)

சர்வதேச யோகா தினம் கடந்த 21ஆம் தேதி உலகெங்கும் சிறப்பாக கொண்டாடப்பட்டதாக பிரதமர் தெரிவித்தார்.

ஒவ்வோராண்டும் இந்த நிகழ்ச்சி மென்மேலும் வளர்ச்சி கண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 55 செகண்ட்ஸ்)

ட்ரகோமா எனப்படும் கண் பாதிப்பிலிருந்து இந்தியா விடுதலை அடைந்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்திருப்பது நமது சுகாதார பணியாளர்களுக்கு கிடைத்த வெற்றி என்று பிரதமர் கூறினார்.

தூய்மை இந்தியா இயக்கம் உட்பட மத்திய அரசின் செயல்பாடுகள் இதற்கு வித்திட்டுள்ளதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (3) 54 செகண்ட்ஸ்)

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ள ஃபாடோதா, கரியமில வாயு உமிழ்வு இல்லாத கிராமமாக மாறியிருப்பதாக பிரதமர் கூறினார்.

அங்குள்ள மக்களின் உறுதிப்பாடு இந்த பெரிய மாற்றத்தை சாத்தியப்படுத்தியிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (4) 60 செகண்ட்ஸ்)

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>>>><<<<<<<<<

உத்ராகண்டில் விடுக்கப்பட்டுள்ள கனமழை எச்சரிக்கை காரணமாக, **Chardham** யாத்திரை அடுத்த 24 மணி நேரத்திற்கு ரத்து செய்யப்படுவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஹரித்வார், ரிஷிகேஷ் உள்ளிட்ட நகரங்களுக்கு வரும் பக்தர்கர்களை தடுத்து நிறுத்துமாறு காவல்துறை மற்றும் நிர்வாக துறையினருக்கு அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே, தொடர் மழை காரணமாக உத்ரகாண்டின் பல்வேறு பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

உத்ரகாசி மாவட்டம், பர்கோட் அருகே கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த 9 பணியாளர்கள் மேகவெடிப்பு காரணமாக பெய்த கனமழையில் சிக்கி காணாமல் போனதாக தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் அந்த தொழிலாளர்களை மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அம்மாநிலத்தில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, யமுனோத்ரி – கங்கோத்ரி நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, டெராடூன், ஹரித்வார் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மழை பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உத்ரகாண்ட் அரசு அறிவுறுத்தியுள்ளது.

\>>>>>>>><<<<<<<<<

ஒடிசாவில் பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை நிறைவுபெறும் இடத்தில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.

தேரோட்டம் நிறைவடையும் இடத்தில் உள்ள கோவில் ஒன்றில் இன்று காலை 4 மணியளவில் இந்த சம்பவம் நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்தோர் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுதொடர்பாக முழு விசாரணையை மாநில அரசு மேற்கொள்ளும் என்றும் சட்டஅமைச்சர் திரு. பிரித்விராஜ் ஹரிச்சந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து ஆய்வு மேற்கொண்டு வருவதாகவும், ரத யாத்திரையில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

\>>>>>>>><<<<<<<<<

தமிழகத்தில் பள்ளிகளின் அருகே சமூக விரோத செயல்களை தடுக்கும் வகையில், சிசிடிவி கேமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கிழ், மாவட்டந்தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பள்ளி கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

\>>>>>>>><<<<<<<<<

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, ராமேஸ்வரத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

மன்னார் கடற்பரப்பில் இன்று அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் கைது செய்துள்ளதாகவும் முதற்கட்ட விசாரணைக்குப் பின்னர் இவர்கள், மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>>><<<<<<<<<

ஆசிய ஸ்னூக்கர் குழு சாம்பியன் போட்டியில் இந்தியா பட்டம் வென்றது. கொழும்பில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மலேசிய அணியை 3-1 என்ற கணக்கில் இந்தியா தோற்கடித்தது.

>>>>>>>><<<<<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் நெல்லை – திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.
திண்டுக்கல்லில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் 3.15 மணிக்கு தொடங்குகிறது.
மற்றொரு ஆட்டத்தில் திண்டுக்கல் - திருச்சி அணியை எதிர்கொள்கிறது.
இந்த ஆட்டம் இரவு மணி 7.15க்கு தொடங்குகிறது.

>>>>>>>>END<<<<<<<<<